**சிறப்பு நீதிமன்றம் எண்.2 ஜெயங்கொண்டம்.**
**முன்னிலை: திரு.V.பிரேம்குமார், B.A., B.L.,**
**சிறப்பு நீதிபதி எண்.2,**
**ஜெயங்கொண்டம்.**
**2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ம் நாள் வியாழக்கிழமை**
**அசல் வழக்கு எண்.161/2024**
**(C.N.R.No. TNAL 06-000324-2024)**
**(ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.172/2023)**

A.விஜயராணி ... வாதி

...எதிர்...

1. K.குருநாதன்
2. K.பாக்கியராஜ் @ தமிழச்செல்வன் (**இறந்தார்**)
3. K.சீதை

**(2nd defendant died his LR D3 implead and plaint Amended as per I.A.1/2024)**

... பிரதிவாதிகள்

இந்த அசல் வழக்கானது முதன் முதலில் ஜெயங்கொண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.172/2023 ஆக கடந்த 03.06.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் மாண்புமிகு அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் A.No.74/2024, நாள் 06.07.2024-ன் உத்தரவுபடி ஜெயங்கொண்டம் சிறப்பு நீதிமன்றம் எண்.2-ற்கு இந்த வழக்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.161/2024 ஆக கடந்த 12.08.2024 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வந்து இறுதியாக

13.08.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.N.சக்கரவர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி கடந்த 12.10.2023 ம் தேதியன்று ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டும், 2ம் பிரதிவாதி இறந்துள்ள நிலையில், 3ம் பிரதிவாதி கடந்த 19.01.2026 ம் தேதியன்று ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கிரைய உடன்படிக்கை முன்தொகையின்படி தாவா தொகையான ரூ.1,63,400/-ம் அதற்குண்டான பின்வட்டி மற்றும் நஷ்டஈட்டுத்தொகையாக ரூ.50,000/-த்தை கொடுக்க உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) வழக்குரையின் சுருக்கம்:-</u>**

பிரதிவாதிகள் தங்களின் குடும்ப செலவிற்காக தங்களது குடும்ப சொத்தை விற்க முயற்சித்தபோது வாதி மேற்படி சொத்தை வாங்க ஒப்புக்கொண்டு, வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்குள் கடந்த 17.09.2020 அன்று ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. மொத்த கிரையத்தொகை ரூ.6,87,000/-என்று

நிர்ணயம் செய்யப்பட்டு முன் பணமாக ரூ.70,000/-த்தை வாதி 1,2 பிரதிவாதிகளிடம் அதே தேதியில் கொடுத்துள்ளார். மேற்படி கிரைய உடன்படிக்கையின் கால அவகாசம் 6 மாதம். மேற்படி 6 மாத காலத்திற்குள் மீதமுள்ள பாக்கி கிரையத்தொகையான ரூ.6,17,000/-ஐ வாதி செலுத்த தயாராக உள்ள நிலையில் பிரதிவாதிகள் தொகையை பெற்றுக்கொள்ளாமல் தட்டிக்கழித்து மேற்படி சொத்தை ஜெயவேல் என்பவருக்கு 14.11.2020 தேதியில் விற்பனை செய்துவிட்டார்கள். இதையறிந்த வாதி, பிரதிவாதிகளை அணுகி விற்பனை குறித்து கேட்டபோது பிரதிவாதிகள் பதில் அளிக்காமல் முன் பணமாக அளித்த ரூ.70,000/-த்தை தர மறுக்கிறார்கள். பிரதிவாதிகள் மேற்படி முன்பணத்தொகையை வட்டியுடன் திரும்ப செலுத்த தவறியதால் கடந்த 30.11.2022 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அளிக்கவில்லை. மேற்படி பிரதிவாதிகளிடம், வாதி கொடுத்த முன்பணத் தொகையையும், பின் வட்டியும், செலவுத்தொகையும் வாதிக்கு, பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுத் தர வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதியின் வழக்குரை சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் வாதி தரப்பில் வாதி **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு, **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாகிவிட்டபடியால், அவர்கள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**4)** வாதி தரப்பில் எழுத்துமூல விவாதஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5) தீர்வு:**

(i) இந்த வழக்கில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் 17.09.2020 ம் தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையின் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், 30.11.2022 ம் தேதியில் வாதி 1,2 பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் இரசீது **வா.சா.ஆ.2** ஆகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டைகள் **வா.சா.ஆ.3** ஆகவும், 17.09.2020 தாவா சொத்துக்கான கணினி பட்டா நகல் **வா.சா.ஆ.4** ஆகவும்,23.09.2020 ம் தேதியிட்ட காசிநாதன் என்பவரின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.5** ஆகவும், தாவா சொத்துக்கான வில்லங்கச் சான்று வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(ii) வாதிக்கும், 1,2 பிரதிவாதிகளுக்குமிடையே கடந்த 17.09.2020 அன்று கிரைய உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. கிரைய

உடன்படிக்கையின்படி முன்தொகையான ரூ.70,000/-த்தை கிரைய உடன்படிக்கை தேதியில் வாதியிடமிருந்து 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் கிரைய உடன்படிக்கையின்படி வாதிக்கு கிரையம் கொடுக்காமல் கடந்த 04.11.2020 அன்று ஜெயவேல் என்பவருக்கு 1 முதல் 3 மற்றும் காசிநாதனின் மகளான குமுதவள்ளி ஆகியோர்கள் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள். இதையறிந்த வாதி 1,2 பிரதிவாதிகளுக்கு கிரைய உடன்படிக்கையின் முன்பணத்தொாகையான ரூ.70,000/-த்தையும், ரூ.50,000/-த்தையும் நஷ்டஈடாக கேட்டு கடந்த 30.11.2022 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அறிவிப்பை பெற்றுக்கொண்ட 1, 2 பிரதிவாதிகள் கிரைய உடன்படிக்கை முன் தொகையை திரும்ப கொடுக்காத காரணத்தால் மேற்படி தொகையை திரும்ப கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

(iii) வா.சா.ஆ.1 கிரைய உடன்படிக்கையின்படி வாதியிடம் 1, 2 பிரதிவாதிகள் ரூ.70,000/-த்தை கிரைய முன்தொகையாக பெற்றுள்ளார்கள் என்பது நிரூபணமாகிறது. கிரைய உடன்படிக்கையில் கண்ட சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்காமல் ஜெயவேல் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்பது வா.சா.ஆ.6 வில்லங்கசான்று மூலம் தெரியவருகிறது. வழக்கு நிலுவையில் உள்ளபோது 2ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவருடைய தாயார் 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். வாதியிடம் பெற்ற ரூ.70,000/- கிரைய

முன்தொகையை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் திரும்ப செலுத்த கடமைப்பட்டவராவார்கள். எனவே வாதி கோரியபடி கிரைய பாக்கி முன்தொகையான ரூ.70,000/-த்தை வட்டி மற்றும் பின்வட்டியுடன் திரும்ப பெற தகுதியுடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. நஷ்டஈட்டுத்தொகையாக ரூ.50,000/-ம் கோரியுள்ளதை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**6) முடிவாக,**

| | |
|---|---|
| 1) | அசல் வழக்கு எண்.161/2024 பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.<br><br>வாதிக்கு சேரவேண்டிய தாவா தொகையான ரூ.1,63,400/-த்தையும், கிரைய உடன்படிக்கை முன்தொகையான ரூ.70,000/-த்திற்கு வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதிவரை 12% வட்டியும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் நாள்வரை 6 % பின்வட்டியும் சேர்த்து வாதிக்கு 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கூட்டாகவோ, தனித்தோ திருப்பி செலுத்தவேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கிறது. மேலும் |

| | |
|---|---|
| 2) | வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, 1 மற்றும் 3 பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>ஒப்பந்த முறிவிற்கு நஷ்டஈடாக ரூ.50,000/-ம் கோரிய வாதியின் பரிகாரத்தை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. |

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20-ம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

PREMKUMAR

Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.08.20 16:08:40 +1000

சிறப்பு நீதிபதி எண்.2,(LAOP)
ஜெயங்கொண்டம்.

<u>வாதி தரப்பு சாட்சி:</u> -

வா.சா.1 - விஜயராணி(வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u> -

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 17.09.2020 | கிரைய உடன்படிக்கை அசல் |
| வா.சா.ஆ.2 | 30.11.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் இரசீது |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | – | மேற்படி அறிவிப்பை 1 ,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புகை அட்டைகள் |
| வா.சா.ஆ.4 | 17.09.2020 | கனிணி பட்டா நகல் |
| வா.சா.ஆ.5 | 23.09.2020 | காசிநாதன் என்பவரின் வாரிசு சான்றிதழ் நகல் |
| வா.சா.ஆ.6 | 17.11.2022 | வில்லங்கசான்றிதழ் |

<u>**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**</u> – இல்லை.

PREMKUMAR

Special Judge No II
Digitally signed by PREMKUMAR
Location: Jayankondam
Date: 2026.08.20 16:08:35 +1000

சிறப்பு நீதிபதி எண்.2, (LAOP)
ஜெயங்கொண்டம்.